RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# கார்ட்டூன் பொம்மைக்குக் குரல் கொடுப்பவன் - குறியீட்டுப் படிமங்களில் வெளிப்படும் வாழ்வு

**பி. கண்ணதாஸ் [அ, *], ப. விமலா [அ]**

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை- 600032, இந்தியா

# A Critical View against Pseudo-Feminism in Rajam Krishnan's Short Stories

**P. Kannadhas [a, *], P. Vimala [a]**

[a] PG & Research Department of Tamil, Chellammal Women's College, Chennai – 600032, India

* Corresponding Author: pkannadhas@gmail.com

Received: 08-12-2025
Revised: 25-02-2026
Accepted: 11-03-2026
Published: 16-03-2026

**ABSTRACT**

Rajam Krishnan holds a unique place among Tamil writers. His works reveal the plight of women in society and the domination of women. He has received attention from many people through his novels. He has also written short stories in magazines from time to time. This article examines how Rajam Krishnan expresses his critical view on pseudo-feminism, which misunderstands or does not realize the principles of true feminism and speaks against men, and uses feminism for personal gains or wrong purposes rather than for the betterment of women.

**Keywords:** Rajam Krishnan, Pseudo-Feminism, Rajam Krishnan's Short Stories, Kalam Short Stories.

## முன்னுரை

இராஜம் கிருஷ்ணன் தமிழில் நாவல், சிறுகதை, வாழ்க்கை வரலாறு, வானொலி நாடகங்கள், வனொலி கட்டுரைகள், மொழிபெயர்ப்பு மற்றும் சிறுவர் இலக்கியம் என பல தளங்களில் இயங்கியுள்ளார். ஒரு மையக்கருவினைக் கொண்டு ஒரே மூச்சில் படித்துமுடித்துவிடக்கூடிய சுருக்கமாக கதைக்கூறும் உரைநடை வகை சிறுகதை. புதினம் என்ற உரைநடை இலக்கிய வகையில் பிரபலப்பட்டிருந்த இராஜம் கிருஷ்ணன் சிறுகதைகளில் கவனம் பெறாதவராக உள்ளார். போலி பெண்ணியத்திற்கெதிரான தனது விமர்சனங்களை வெளிப்படுத்தியமையை பெண்ணிய அணுகுமுறையில் ஆய்வது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## ஆண்கள் மீதான தவறான புரிதலும் விமர்சனமும்

பெண்களின் முன்னெற்றத்தினைக் கருத்தில் கொள்ளாமல் ஆண்களை எதிர்ப்பதும் வெறுப்பதுமே பெண்ணியம் என்ற தவறானதொரு கருத்திற்கு இராஜம் கிருஷ்ணன் ‘களம்’ என்ற சிறுகதையில் ஆனந்தி மாதர் சங்கத்தினை நிறுவி, அதன்மூலம் பெண்கள் முன்னெற்றத்திற்கான பணிகளைச் செய்து வருகிறாள். தன்னுடைய மாத ஊதியத்தில் சங்கத்திற்கான செலவுகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தனது புகுந்த வீட்டில் ஆனந்திக்கு ஆதரவு இல்லாவிட்டாலும் அவளுடைய கணவன் அவளுக்கு உறுதுணையாக இறுதிவரை இருக்கின்றான். “உயரமாக அவன் நடந்து செல்வதை ஆனந்தி பெருமிதத்துடன் பார்க்கிறாள். பலரும் பெண் விடுதலை என்பது ஆணை எதிர்ப்பது என்று நினைக்கிறார்களே என்று வருந்துகிறாள். கல்விகற்று, பண்பாடடைந்தவர்கள் என்றால், ஒருவரை மற்றவர் அறிவு சார்ந்த மனிதர் என்று மதிப்பதேயாகும் என்று ஏனோ புரிந்து கொள்வதில்லை.”1 என்று ஆனந்தின் மூலமாக தனது விமர்சன பார்வையை முன் வைக்கிறார்.

கணவன் மனைவியிடையிலான குடும்ப பிரச்சினைகளில் கருத்தொற்றுமை கொண்டு செயல்படுவது அவசியம். சில நேரங்களில் கருத்தொற்றுமை இல்லாத நிலையில் ஆண்கள் மீது

ஆதிக்கம் என்று தவறானதொரு பிம்பம் பெண்களால் உருவாக்கப்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டும் விதமாக 'ஞாயிற்றுக்கிழமை' சிறுகதையில் சாரநாதனின் மனைவி கௌரிக்கு ஞாயிற்றுக்கிழமை கூட ஓய்வு எடுப்பதில்லை எனவும் இதனைத் தன் கணவர் கண்டுக் கொள்வதில்லை எனவும் கதை தொடங்க, இறுதியில் தன் மாமியார் கௌரிக்கு உதவும்போது "சாரநாதனைப் பார்த்து ஒரு சிரிப்பால் வெட்டிவிட்டு, கௌரி உள்ளே சென்றாள் அந்தச் சிரிப்பில் ஏளனம் நிறைந்த வீண்கர்வம் இல்லை; இன்பப் பெருமிதம் அவளைக் கிளு கிளுக்கச் செய்தது"2 என கதையும் முடிவடைகிறது.

"கைப்பிடித்தே காதலொருவனை" என்ற சிறுகதையில் ரஞ்சனி பேராசிரியர் பணிபுரிந்து வருகிறாள். தன்னுடைய மாமியார் வீட்டுக்குள் அடைபட்டு சமையல் அறையிலேயே வாழ்க்கையைக் கழிப்பதைப் பொறுக்கவியலாமல் தன்னுடைய கணவன் மற்றும் மாமனாரிடம் கடின முயற்சியின் வாயிலாக மாமியாரை மட்டும் சுற்றுப்பயணம் அழைத்துச் செல்ல அனுமதி பெறுகிறாள். சுற்றுப்பயணம் சென்று விட்டு வந்தபின் மாமியாரின் மகள் பின்வருமாறு உரைக்கிறாள். "ஆமாண்டி எங்களுக்கில்லாத கரிசனம் உனக்கு எப்படி வரும்? உனக்கு ஒரு குழந்தை, ரெண்டாவது குழந்தை வரும். வீட்டைப் பார்த்துக்க ஆள்வேணும் உங்கிட்ட உருப்படியாக அஞ்சு பவுன் நகை கிடையாது. அம்மாட்ட இருக்கு எத்தனை தயிரியமிருந்தா ஒண்ணுந்தெரியாத இந்த அம்மாவை மயக்கி ஒரு ஆண் துணையில்லாம கூட்டிண்டு போயிட்டுவரே! ரெண்டு பவுனில் நான் முடிச்சு மாலை கேட்டேன் இனிமேல் குடுப்பாளா?" ரஞ்சனி வாயடைத்து நிற்கிறாள். படித்திராத மாமியாரின் அடிமைத்தனத்தை உணரச் செய்வது கடினமாக இல்லை. இந்த எம்.ஏ.க்காரியை எப்படிச் சமாளிப்பது?"3.

மேற்கண்ட கதைக்களத்தின் வாயிலாக பெண்கள் அடிமைத்தனத்தில் இருந்து மீண்டுவருவதனைத் தடுப்பது மற்றொரு பெண் எனக் காட்சிப்படுத்தப்படிகிறது. எனவே, பெண்களின் முன்னெற்றத்தைத் தடுக்கும் தடைகளாக ஆண்கள் மட்டுமே அன்றி பிற்போக்குத்தனமான கருத்துகளை அல்லது பழமையைப் பின்பற்றுகின்ற பெண்களும் காரணம் என்பதை இராஜம் கிருஷ்ணன் உணர்த்த விழைகிறார்.

## தனிப்பட்ட ஆதாயமும் விமர்சனமும்

தன்னுடைய தனிப்பட்ட ஆதாயத்திற்காக மற்றவர்முன் பெண் முன்னெற்றத்திற்கு உழைப்பவர் போன்று ஏமாற்றுபவர்களை 'ஒட்டுதல்' மற்றும் 'களம்' ஆகிய சிறுகதைகளில் தன் விமர்சனப் பார்வையை வைக்கிறார் இராஜம் கிருஷ்ணன். ஒட்டுதல் சிறுகதையில் பிரேமா தன் வீட்டிற்கு வேலைக்காரியாக வந்த சச்சு என்ற சிறுமிக்குக் குறைவான வேலையும் அவ்வேலைக்கான ஊதியத்தைவிட அதிக ஊதியத்தை அளிப்பதாகவும் மற்ற மாதர் சங்க பெண்களிடம் அனுதாபங்களைப் பெறுகிறாள். "சச்சுவைக் காட்டி, 'சுற்றுவேலைக்கென்று ஊரிலிருந்து அம்புஜம் அழைத்து வந்தாள். ஏழு ரூபாய் மாசம். வந்ததும் வராததுமாய், கஜம் ஐந்து ரூபாயில் பிளானல் வாங்கிச் சட்டை தைத்துக் கொடுத்தாயிற்று.

"வெடவெடவென்று நடுக்க, ஒரு போர்வைகூட இல்லாம அனுப்பியிருக்கிறார்கள் என்ன செய்ய? பார்த்துக்கொண்டிருக்க முடிகிறதா?" என்று ஒப்புவித்தாள்."4

களம் சிறுகதையில் ஆனந்தியின் மாதர் சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் பெண்கள், மாதர் சங்கத்தின் வாயிலாக ஏதெனும் ஒரு நல்ல பணியைப் பெற நினைக்கின்றனர். பணியைப் பெறுவதோடு மட்டுமல்லாமல் பணியைப் பெற்ற சில மாதங்களில் அவர்களும் சங்கத்தில் இருந்து விலகிக்கொள்வதே அவர்களின் முடிவாக உள்ளது. "எண்பது ரூபாய் வாடகையில் எடுத்திருக்கும் சங்க அறையில் சக்குவும் கிறிஸ்டியும் வந்திருக்கின்றனர். இரு வரும் திருமணமாகாதவர்கள் வேலையும் கிடைக்கவில்லை. ஏதேனும் ஒன்று பலிதமானால் சங்கத்துக்கு முழுக்குப் போடுவார். பானுவைப் போல் சங்கம் வேலை தேடிக் கொடுக்கும் என்று ஒட்டுபவர்கள் தாம் அதிகம் பேர்."5 இவ்வாறு பெண்களுக்கான முன்னெற்றம் என்ற பெயரில் தங்களுக்கான தனிப்பட்ட முன்னெற்றங்களை மட்டுமே எதிர்க்கொள்ளும் பெண்களையும் விமர்சித்துள்ளார்.

## பெண்ணிய எதிர்ப்பு

பெண்ணியவாதிகள் எனத் தங்களைப் பிறரிடம் காட்டிக்கொண்டு சமுக அல்லது பொருளாதார அளவில் தாழ்ந்த பெண்களிடம் வெறுப்பு அல்லது பிற்போக்காக நடந்துக் கொள்ளும் பெண்களை 'ஒட்டுதல்' சிறுகதையில் காட்சிப்படுத்துகிறார். பிரேமா மாதர் சங்கத்தில் முக்கியமான உறுப்பினராக உள்ளாள். பெண்களின் முன்னெற்றத்திற்காகவும் குழந்தைகள் முன்னெற்றத்திற்காகவும் பிரேமா தன் வீட்டில் வேலைச் செய்யும் சிறுமியை ஒரு முதலீடுச் செய்த பொருளாகவும் வேலையைச் செய்யும் அடிமையாகவும் அவளைப் பார்க்கிறாள். "'இதோ பார், அழுது சாகசம் செய்யாதே போதும். வேலைக்கு வந்த பெண்ணின் லட்சணம்! சாப்பாடும் காபியும் இரண்டு வேளை தந்து மெத்தைமேல் வைத்தால் உனக்கு வலிக்காது? ரெயில் செலவு செலவழித்து, கம்பளி வாங்கியதற்குக்கூட இருக்கவில்லையே!

இரண்டு மாசம் இரு இந்தக் கம்பளிப் பணமேனும் கழியும்; அனுப்பி விடுகிறேன்' விருக்கென்று பிரேமா உள்ளே போய்விட்டாள்."6

பிரேமாவின் ஆதிக்கக் கொடுமையைத் தாங்க இயலாமல் சச்சுவும் தன் அம்மாவின் வீட்டிற்குப் பிரேமா வீட்டில் இல்லாத நேரம் சென்றுவிடுகிறாள்.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணனின் பெரும்பாலான படைப்புகளில் பெண் முன்னெற்றத்தைப் பற்றியும் பெண்களின் அவலநிலையைப் பற்றியும் கூறியிருப்பினும் பெண்ணியத்தினூடெ உள்ள போலி பெண்ணியத்தினைக் குறித்தும் விமர்சிக்காமல் இல்லை. பெண் விடுதலை, சுயமரியாதை, பெண் முன்னெற்றம் அடைவதற்கு பெண்ணியம் எவ்வளவு முக்கியமோ அதேவேளையில் பாலின சமத்துவத்தை பாதிப்புக்குள்ளாக்கி பெண்ணியத்தின் தன்மையைப் பாதிக்கும் போலி பெண்ணியமும் களையப்படவேண்டியது அவசியம். பெண்களின் முன்னெற்றத்திற்கு தடைகளாக இருப்பது ஆண்கள் மட்டுமே என்ற பிம்பக்கட்டமைப்பினை 'களம்' மற்றும் 'கைப்பிடித்தே காதலொருவனை' போன்ற சிறுகதைகளின் வாயிலாக மறுத்துள்ளார். போலி பெண்ணியத்தினைக் குறித்து இராஜம் கிருஷ்ணன் விமர்சனப் பார்வையில் தொட்டுச் செல்கிறாரே அன்றி போலி பெண்ணியத்தினை மையமிட்ட கதைக்களத்தைப் படைக்கவில்லை. இருப்பினும் இராஜம் கிருஷ்ணன் திறம்பட தமது சிறுகதைகளின் வாயிலாக போலி பெண்ணியத்தைக் குறித்து எடுத்துரைத்துள்ளார் என்பது ஆய்வின்வழி அறியமுடிகிறது.

## References

கௌமாரீஸ்வரி. எஸ் (2025), இராஜம் கிருஷ்ணனின் சிறுகதைகள்., சீதை பதிப்பகம், திருச்சி

நடராசன், தி.சு., (2009) திறனாய்வுக் கலை, நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License.